RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2222717

# தமிழ்பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளில் செல்நெறிகள்

மோ. இந்துமா [அ, *], செ. ஹேமலதா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Morals in Short Stories by Tamil Women Authors

**M. Induma [a, *], S. Hemalatha [a]**

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: devabalu.m@gmail.com

Received: 30-09-2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

All literatures is an expression of the emotions of the creators. They vary from person to person due to various factors such as the creator's mindset, expressiveness, language style, storytelling style, etc. It is essential that literature changes with time and that literature reflects the context of the time. In this way, the authors create literature using the experiences they have seen, heard, and heard in their lives as the core of their stories. From that time to this time, women creators have been posting their ideas through writings on this website. Short story literature is a genre of literature that emerged in Tamil according to the context of the time due to the arrival of Europeans. Short story literature in Tamil is flourishing today. Even though short stories are small in structure, the content the creators set within them is large. Human life in this interdependent world is intertwined with feelings like hatred and anger that arise within a human being. The reason for these human feelings is due to the influences of the family, society, etc, that he lives in. In the short stories of women writers, it is unique to vividly tell the problems and shortcomings of the family, society, etc., on which humans live. From that period to this period, the short stories of women writers are mostly centered on family and society, and the hardships and emotional distress experienced by women in the family and society, and the hardships and emotional distress experienced by women in the family and sociedy, and the ways in which women deal with the situation, have been set in line with the period when literature arose. Family is the organization that connects individuals and collectives like society, nation, world. It can be said that most of the short stories are written centered on women because women are indispensable in the family. Events based on family or society form the core of short stories are written centered on women because women are indispensable in the family. Events based on family or society form the core of short story literature. Expressing individual feelings such as likes and dislikes through short stories, highlighting the mass and defects of the family or society, sowing changes in the society and guiding them are the literary norms of women writers. This method is to exemplify their morals through the short stories of Ambai, Damayanti, Sudamani, Anuttama, Vasanthi and Nirmala Raghavan.

**Keywords:** Women Creators, Consciousness, Mood, Society, Family

## முன்னுரை

பெண் படைப்பாளர்கள் தங்கள் சிறுகதை இலக்கியங்களை குடும்பம், சமூகம் சார்ந்தே பெரும்பாலும் படைத்துள்ளனர். அதில் வெளிப்படும் மனித உணர்வுகளும், மனநிலைகளும்

இயல்பானதாகவும், யதார்த்தமானதாகவும் அமைந்திருப்பது தனிச்சிறப்பு. படைப்பாளரின் உணர்ச்சிகள் படிப்பவர்களுக்கும் ஏறுபடுவதே சிறந்த இலக்கியம். உணர்வு, உணர்ச்சி இவையிரண்டும் வெவ்வேறானவை. உணர்ச்சி என்பது புலன்களால் வெளிப்படுவது. உணர்வு என்பது மனதினுள் நிகழும் போராட்டம். அவ்வுணர்வை சொற்களால் வடிப்பது கடினம். ஆனால் ஒரு சூழலின் தாக்கத்தால் பாதிக்கப்படும் பாத்திரங்களின் உணர்வுகளையும், மனநிலைகளையும் படிப்பவர்கள் உணரும்படி அமைக்கும் செல்நெறிகளையே பெண்படைப்பாளர்கள் பின்பற்றுகின்றனர்.

## செல்நெறிகள்

தனி மனிதர்களாக வாழ்வதால் இவ்வுலகம் இயங்குவதில்லை. வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் நிலையே இவ்வுலகில் வழக்கமாகும். ஆண், பெண் என்ற இருவருக்கிடையேயான அன்பினால் குடும்பம் உருவாகிறது. அக்குடும்பத்தில் உறுப்பினர்கள் அனைவருக்குமான மனநிலைகள், உணர்வுகள், தேவைகள் என பலவும் பலவாறாக அமைந்தாலும் அன்பின் பிணைப்பால் அவை ஒரு கூட்டமைப்பாக இயங்குகின்றன. பல உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் இணைந்து சமுதாயம் என்ற கூட்டமைப்பு உருவாகிறது. குடும்பம் சமுதாயம் என்ற இரண்டு கூட்டமைப்பிலும் சில செயல்பாடுகள் மனித உணர்வுகளில் விளைவுகளை ஏற்படுகின்றன. பெண் படைப்பாளர்கள் அம்மனித உணர்வுகளையும், மனநிலைகளையும் சிறுகதை இலக்கியங்களில் படம்பிடித்துக்காட்டுகின்றனர்.

## அம்மா ஒரு கொலைசெய்தாள்

அம்மா ஒரு கொலை செய்தாள் என்ற சிறுகதையில் சிறு பெண்ணின் மனநிலை படம்பிடித்துக்காட்டப்படுகிறது. இன்று சிறு வயதிலேயே பெண்கள் பூப்பெய்துகின்றனர். பூப்பெய்துதல் பற்றிய புரிதல் இல்லாத அச்சிறுமிகள் அந்நிலையில் தன் அன்பிற்குரியவர்களின் ஆதரவையே நாடுவர். அவ்வகையில் தன் அன்பிற்குரிய தாயை நாடும் சிறுமி, அதுவரை அன்பின் உருவமாக இருந்த தாய், அவளை அரவணைக்காது, கோபமாக பேசும்போது அச்சிறுமியின் மனநிலையும், உணர்வுகளும் இக்கதையின் கருவாகிறது. அதுமட்டுமன்று ஓடியாடி திரிந்த நிலைகள் கட்டுப்படுத்தப்படுவதும், பெண் பார்க்க வந்தவர்கள் பெண் கருப்பாக இருப்பதால் வேண்டாமென்றதும், அச்சிறுமியும் கருப்பாக இருக்க, முன்பு தாயே அவளது அழகை வருணித்தவள் இன்று அக்கருப்பு நிறமே தாயின் கோபத்திற்கு காரணமானது என்ற விதத்திலும், தாயே அச்சிறுமியை நீ சிறுமியாகவே இருக்க வேண்டும் என்று முன்பு கூறிய தன்மைகள் அனைத்தும் பெண்களின் மனநிலைகளை படம்பிடித்துக்காட்டுகின்றன.

“உனக்கு இந்த இழவுக்கு என்னடீ அவசரம்? இதுவேற ஒரு பாரம்” சுளீரென்று. கேள்வி. யாரைக் குற்றம் சாட்டுகிறாள்? ஒலியில்லாக் கேவல்கள் நெஞ்சை முட்டுகின்றன. அம்மாவின் உதடுகளும், நாசியும், நெற்றிக் குங்குமமும், மூக்குப் பொட்டும், கண்களும் ரத்த நிற ஜ்வாலையை உமிழ்வது போல் தோன்றுகிறது. அந்த நெருப்பில் அவள்மேல் போர்த்தியிருந்த தேவ ஸ்வரூபம் அவிழ்ந்து விழ நிர்வாணமான வெறும் மனித அம்மாவாய் அவள் படுகிறாள். அந்த ஈரமில்லாச் சொற்கள் பட்டாக் கத்தியாய் எழுந்து முன்பு முளைவிட்டிருந்த அத்தனை அழகுகளையும் குருட்டுத் தனமாக ஹதம் செய்கிறது. தீராத பயங்கள் கரும் சித்திரங்களாய் நெஞ்சில் ஒட்டிக்கொள்கின்றன.” (Vennila, 2014)

என்று சிறுமியின் மனநிலையையும், உணர்வையும் சிறுகதையில் உயிரோட்டத்துடன் படைத்துள்ளார் ஆசிரியர். கருப்பு நிறமான தன் மகளின் மனதில் தாய் விதைத்த அழகு அத்தாயாலேயே கொலை செய்யப்பட்டது என்ற தன்மையில் கதை முடிவடைகிறது. ஒருவரது அன்பிற்குரியவர்களே அவரை காயப்படுத்தும் நிலை குடும்பங்களில் காணப்படுகிறது என்ற ஆதங்கத்தை கதையினால் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

## ஒரு காட்டில் மான்

ஒரு காட்டில் மான் என்ற சிறுகதை பூப்பெய்தாத பெண்ணின் மனநிலையையும், உணர்வுகளையும், குடும்பத்தில் அவளைப் பற்றிய வருத்தங்களையும் படம்படித்து காட்டுகிறது. அவள் பூப்பெய்த வேண்டும் என்று அவளுக்கு அளிக்கப்படாத மருந்தே கிடையாது. மந்திரிக்காத கோயிலில்லை. இயற்கையின் நிலையால் அப்பெண் பூப்பெய்தவில்லை. அவளுக்கும் தன் மாமன் மீது ஆசை.

"ஏகாம்பர மாமாவுக்கு வேறு பெண் பார்த்தபோது அத்தை (அப்பெண்) அன்றிரவு அரளி விதைகளை அரைத்துக் குடித்துவிட்டாளாம். முறி மருந்து தந்து எப்படியோ பிழைக்க வைத்தார்களாம். உன் மனசு நோக எனக்கெதுவும் வேண்டாம் என்று மாமா கண்கலங்கினாராம். அதன்பின் அத்தையே அவருக்கு ஒரு பெண்ணைப் பார்த்தாள்" (Ambai, 2017).

என்றபோது அவள் மனதும் பிற பெண்களைப் போல் ஆசை என்ற உணர்வினையுடையது என்பதும், அவளது மனநிலையும் வெளிப்படுகிறது.

அவள் உடலைப்பற்றி அவளது சகோதரி கேட்டபோது,

"ஏன், என் ஒடம்புக்கு என்ன? வேளாவேளைக்குப் பசியில்லையா? தூக்கமில்லையா? எல்ல ஒடம்புக்கும் உள்ள சீரு இதுக்குமட்ட இருக்குது. அடிபட்டா வலிக்குது. ரத்தம் கட்டுது. புண்ணு பழுத்தா சீ வடியுது. சோறு தின்னா செரிக்குது. வேற என்ன வேணும்" என்ற வரிகள் பூப்பெய்தாத அப்பெண்ணின் உடலும் மற்ற மனிதர்களைப் போல இயல்பானது என்பதை வெளிப்படுத்துகின்றன (Ambai, 2017). இப்படி இயல்பான உடலும் மனமும் உடைய பெண்ணை பூப்பெய்துவதற்காக பல மருந்துகள், பூஜைகள் என பல துன்பங்களுக்கு அவளது குடும்பம் உட்படுத்தியுள்ளது. அதனால் பலவித பயங்களுக்கு ஆட்பட்டதையும், அதிலிருந்து தான் மீண்ட விதத்தையும் அப்பெண்ணே ஒரு கதையாக கூறுவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

ஒரு காட்டில் எவ்வித பயமுமின்றி ஆனந்தம்க வசித்த மான் கூட்டத்தினிடையே நீர் அருந்த சென்ற இடத்தில் ஒரு மான் மட்டும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு வேறொரு காட்டில் சிக்கி பயத்தில் பலநாள் திரிந்தது. பௌர்ணமி இரவில் அக்காட்டின் தன்மையை முழுமையாக உணர்ந்த மான்

"அந்தப் புதுக்காட்டோட ரகசியம் எல்லாம் அந்த மானுக்குப் புரிஞ்சிடுச்சு. அதுக்கப்புறமா பயமில்லாமல் அந்த மானு அந்தக் காடெல்லாம் சுத்துச்சு. பயமெல்லாம் போயி சாந்தமா போயிடுச்சு" என்ற வரிகள் தன்னைச் சார்ந்தவர்கள் பூப்பெய்தவில்லையென பயமுறுத்தி, தனியாக மாட்டிய மான் போன்று அப்பெண் அச்சம் கொண்டதாகவும், பிறகு அனைத்தும் தெளிந்து வாழ பழகியதாகவும் அவளது உணர்வினையும் மனநிலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன (Ambai, 2017).

## காற்றில் பரவும் கதைகள்

இன்றைய சூழலில் பெண்களும் வேலைக்குச் செல்லவேண்டியது அவசியமானதாகிவிட்டது. அவ்வகையில் வேலைக்கு செல்லும் பெண்ணின் உணர்வினை வெளிப்படுத்துவதாக அமைகிறது. அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் சிலர் இணைந்து ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். அவ்வீட்டில் தங்கியிருந்த பெண்ணிற்கு மாதவிலக்கு சரியாக வராததற்கு ஹார்மோன் காரணமாக இருக்க, அவளைப் பற்றி அலுவலகத்தில் தவறான வதந்திகள் பரப்பப்பட்டது. அதற்கு அவளுடன் தங்கியிருந்த, அதே அலுவலகத்தில் பணியாற்றும் மற்றொரு பெண் காரணமாக இருந்தாள். அலுவலகத்தில் பணிபுரியும் மற்றொரு பெண்

"உங்களுக்கு பாய் ஃப்ரெண்ட்ஸ் ஜாஸ்தியாமே? என்றாள்."

அப்பெண்ணின் மனநிலையும் ஒரு கட்டத்தில் உணர்ச்சிவயப்பட்டு கோபத்தால் கெட்ட வார்த்தைகளைப் பேசி விட்டாள். ஆண்களுடன் பழகுவதே தவறு என்ற நிலையில் இந்த சம உரிமை சமுதாயமும் நடந்து கொள்வதை பாதிக்கப்பட்ட பெண்ணின் வழியாக

“வெறும் மார்பும் பெண் அவயம் தாண்டியும் வாழ்வு இருப்பதை யார் எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்”

என்று பெண்களின் மனநிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

அதே சமயத்தில் வேலைக்குச் சென்று, பிற ஆண்களுடன் பேசாத பெண்ணின் நிலையையும்

“எனக்கு ஒரு அக்கா இருந்தாள். கல்யாணமாகி அவள் கணவனுக்குப் பணம் காய்ச்சி மரமாக இருந்தாள். பிள்ளை பெற்று, சமைத்துப்போட்டாள். அலுவலகத்தில் மற்ற ஆண்களோடு பேசாமல் இருந்து கற்பைப் பாதுகாத்தாள். ஆனால் தினமும் அவனோட படுத்தியா? இவனோட படுத்தியா? போன்ற கேள்விகளைக் கேட்ட புருஷனோடு படுத்துக்கொண்டாள். அவன் சுமத்திய பாலியல் குற்றச்சாட்டுகள் விவாகரத்து நாட்களில் ஜொலித்தபோதும், குழந்தைகளை அவளிடமிருந்து பறித்துக்கொண்டபோதும், பாலிடால் குடித்து செத்துப்போனாள்.” விவரித்துள்ளார்.

பெண்களைப் பற்றிய தவறான வதந்திகளும், சந்தேகங்களும் பெண்களின் உணர்வுகளையும், மனநிலையையும் பாதிக்கின்றன. சிறை காக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை என குறள் எடுத்தியம்புகின்றது. பெண்களை சிறையில் வைத்து காத்தலைவிட அவர்கள் தங்கள் நிறையை தானே காக்கும் வல்லமை பெற்றவர்களாகயிருத்தலே சிறப்பு என்ற கருத்திற்கு ஏற்ப பெண்கள் வேலைக்குச் சென்றாலும், ஆண்களுடன் பழகினாலும், தங்கள் நிறையழியாமல் பாதுகாத்துக்கொள்ளும் பண்பினை பெற்றிருந்தால் போதுமானது என்பதும், அவர்களைப் பற்றிய தவறான வதந்திகளை பிறர் பேசாமலித்தல் வேண்டும் என்ற விழிப்புணர்வை சமுதாயத்தில் விதைத்துள்ளார் ஆசிரியர்.

## தனிமையின் வாசனை

இல்வாழ்வில் கணவன் மனைவியிடையே அன்பு என்ற ஒன்று இன்றியமையாததாகிறது. எனவே திருவள்ளுவரும்

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது”

என்பதில் அன்பை முன்னிலைப்படுத்தினார் (Tiruvalluvar, 2016). தனிமையின் வாசனை என்ற சிறுகதையில் கணவனது அன்பு கிடைக்காத மனைவியின் மனவேதனைகள் படம்பிடித்துக்காட்டப்படுகின்றன.

“தனிமையின் கூர்நொடிகளில் மின் விசிறியின் ஓசைகூட பிரமாண்டமாக எதிரொலிக்கிறது உனக்கு. உன் தனிமையின் வலிகளை உணர்ந்திருப்பானா அவன்? அல்லது பெண்மையை முற்றிலும் நிராகரிக்கும் ஆண் வர்க்கத்தின் ஒட்டுமொத்த உணர்வு அவனிடமும் இருக்கக்கூடுமோ?” என்ற வரிகள் அப்பெண்ணின் மனநிலையை உணர்த்துவதாக அமைகிறது.

“கடைசி ஜன்னலைப் பூட்டும்போது அவன் கடந்து போன சாலையைப் பார்க்கிறாய். பார்வைகள் அநாதையாகுமா? உன் கண்களில் உலவுகிறது ஓர் அநாதையின் முற்றுப்பெறாத பயணம். தூக்க மாத்திரைகள் சாப்பிட்டோ, தூக்குப் போட்டோ, நீ முடிவு மேற்கொள்ளப் போகிறாயோ என்று பயம் வருகிறது முதன்முதலாக.”

என்ற வரிகள் குடும்பத்தில் பெண்ணானவள் தன் கணவனது அன்பு கிடைக்காதபோது அவள் அநாதைக்கு சமமானவளாகிறாள் என்பதையும், அவ்வன்பு கிடைக்காத போது அவளது மனநிலையையும் இக்கதை உரைக்கிறது.

## இணைப்பறவைகள்

இணைப்பறவைகள் எனும் சிறுகதையில் கணவன் மனைவிக்கு இடையேயான அன்பை, புரிதலை அழகுற எடுத்துக்காட்டியும், ஒருவரின்றி மற்றொருவர் வாழ்வது கடினமாக அமையும் விதத்தையும் விளக்குகிறது. அறுபது ஆண்டுகால திருமண வாழ்வில் பெறவேண்டிய அத்தனை செல்வங்களையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்த இணையில் மனைவியானவள் இறந்துவிட, அவளது நினைவுகளால் வருந்தும் கணவனுக்கு உறவினர்களும், தெரிந்தவர்களும், குடும்பத்தாரும் ஆறுதல் கூற முனைகின்றனர். தன் மனைவி இறந்த பொழுதும் பிறகும் துளிக்கூட கண்ணீர் விடாத கணவனான அம்முதியவர் அவர்கள் கூறும் ஆறுதல்களை புறந்தள்ளி, அதைப் புறக்கணிக்கும் விதமாக பிறவற்றைப் பேச, அவர்கள் இவரை மண்டைக்கணம் பிடித்தவர் என்றும் அவரது மனைவி இவருடன் எப்படி குடும்பம் நடத்தினாரோ? என்றெல்லாம் சாடினர். ஆனால் அவரோ, தன் மனைவி ஆண்ட இவ்வீட்டின் அனைத்து இடங்களிலும் அவளது நினைவுகளை மனதில் எண்ணி, எண்ணி, மனதினால் வருந்தி, இறந்தும் போவதை,

"தாத்தா வீட்டினுள் ஒவ்வொரு அறையாகச் சென்றார். நின்று நின்று இடங்களை வெறித்தார். பாட்டி பூஜை செய்த அறைக்குச் சென்று அசையாமல் சிறிது நேரம் நின்றார். பிறகு கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு பின்கட்டுக்குப் போனார். தூக்கத்தில் நடப்பதுபோல் நடை யதார்த்தமாக இயங்கியது. தொழுவம், துவைக்கும் கல், மல்லிகைக்கொடி, ஒவ்வொன்றின் அருகிலாக இருட்டினூடே சென்று நின்றார். அங்கங்கே தயங்கி, தயங்கி, நின்று மண்ணிலும், வானத்திலும் பார்வையை நெடுக அலையவிட்டார். பிறகு வீட்டுக்குள் திரும்பி வந்து தன் படுக்கையில் படுத்துக்கொண்டார். மறுநாள் காலை தாத்தா எழுந்திருக்கவில்லை" என காட்சிப்படுத்தியிருப்பார்.

மேலும் கணவன் - மனைவியின் ஊடல்கள், பேரன், பேத்திகளின் அன்பு, என குடும்பங்களுக்குள்ளான உணர்வுகள் இடம்பெற்றுள்ளன.

## பூமாலை

பூமாலை எனும் சிறுகதையில் ஒரு பெண் தன் மனதுடன் கடிதவழி பேசுவதாக அமைந்துள்ளது. தனிமனித உணர்வுகள் ஒருவரது செயலால் பாதிக்கப்படுவதும், தனக்கு துன்பம் விளைவித்தவர்கள் நம்மிடம் காட்டிய அன்பை நினைவுகூறும்போது அவை மறந்துவிடும் என்பதையும் வாழ்வில் தேவையற்ற சந்தேகங்கள் மன நிம்மதியை கெடுக்கும் என்பதையும், ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் மனமானது ஒரு கண்ணாடி என்பதையும் கதைவழி எடுத்தியம்புகிறார்.

"நான் சுவர் இல்லை ரம்யா, உன்னுள் இருக்கும் கண்ணாடி, உன்னை நீ என்னில் பார்த்துக் கொள்ளலாம்"

"உன்னை வெறுப்பவளுக்கு இந்த உதவியைச் செய்தாயானால் அதில் உனக்குப் பெரிய லாபம் இருக்கிறது ரம்யா. வெறுப்பு, கசப்பு என்றெல்லாம் மனசில் நீ சேர்த்து வைத்திருக்கும் குப்பை கூளங்கள் அனைத்தையும் இந்த ஒரே செயல் ஒரே வீச்சில் பெருக்கித் தள்ளித் துப்புரவாக்கிவிடும். அப்படிச் சுத்தமாகிய இடத்தில், நீ இதுவரை புறக்கணித்துவந்துள்ள நல்ல நினைவுகளை அந்தப் பூக்களை எடுத்து வைத்துக் கொள்ளலாம். அவற்றை அழகான மாலையாய்த் தொடுக்கலாம். சித்திக்கு உதவி செய்வதன் மூலம் கசப்புகளை உடைத்து நீ பெறும் விடுதலையுணர்வு அந்தப் பூமாலையில் ஒரு பாரிஜாத மலர்போல் நடுநாயகமாய் விளங்கும். எனக்கும், குப்பையின் மக்கிய நாற்றம் நீங்கிப் பூமணம் கமழும் உன் மனசில் குடியிருப்பது கொஞ்சம் வசதியாய் இருக்கும்."12 (ஆர். சூடாமணி - 2013)

என்றதன் மூலம் சிறுவயதில் கொடுமைப்படுத்திய சித்திக்கு உடல்நிலை சரியில்லாததால் அவள் மகன் ரம்யாவிடம் பணஉதவி கேட்கிறான். அவள் மனமானது சிறுவயதில் கொடுமைப்படுத்திய சித்தியும், நோய்வாய்ப்பட்ட சித்தியும் மாறிமாறி வரும் நிலையில் தன் மனதுடன் ஒரு போராட்டமாக கதை அமைகிறது.

ஒவ்வொருவரது மனமும் அவர் வாழ்வில் நடந்த நன்மை, தீமைகளை தன்னகத்தே கொண்டுள்ளன. இவை அவ்வப்போது நினைவில் தோன்றி மகிழ்விப்பதும், வருத்துவதும் உண்டு. அப்படிப்பட்ட மனம் மகிழ்ச்சியை மட்டும் தரவேண்டுமாயின், மனமானது நல் நினைவுகளை மட்டும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை விளக்குவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

## இரு தந்தையர் ஒரு மகன்

பெண் தன் இளம்வயதில் கணவனை இழந்தால் உடன்கட்டையேறுதலும், விதவைகோலம் பூண்ட காலங்களும் போய்விட்டது. அவள் மறுமணம் செய்து வாழ்வது மிகப்பெரிய புரட்சியென்ற இச்சமூகத்தில் மறுமணம் செய்ததால் அவள் வாழ்வில் துன்பங்களையே அனுபவிக்கிறாள் என்பதை எடுத்துக்காட்டும் கதையாக இரு தந்தையர் ஒரு மகன் என்ற சிறுகதை அமைகிறது.

கட்டியவனோ, குடியினால் மாண்டுவிடுகிறான். வேலை செய்யும் இடத்தின் முதலாளியோ "நீ ஆயுசு பூராவும் இப்படி எதுக்குத் திண்டாடணும்? நான் ஒன்னை ஏத்துக்கிறேன். நீ சரின்னு சொன்னா!" என்று கூற அவர் நாற்பதைந்து வயதான பிரம்மசாரி என்பதால் ஒத்துக்கொண்டாள். அவனும் அவளது மகனை கட்டுப்பாட்டோட வளர்த்து படிக்கவைத்தார். அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவளது மகனுக்கு மட்டும் தன் தந்தையாக அவரை ஏற்க இயலாதநிலை ஏற்பட்டது. பெரியவனானதும் திருமணம் செய்துவைத்தனர் அவனுக்கு. "அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான்" தன் தந்தையைப் போல் குடித்து, மனைவியை அடிக்கும் வழக்கம் கொண்டிருந்தான். அவனது அடி தாங்காமல் அவனைப் பற்றி அவன் தாயிடம் மருமகள் கூற, நீ அவனிடம் பேசினாயா என்று அவன்தாய் கேட்க, அவன் மனைவி "சொல்லிப் பார்த்தேன் அத்தே. நான் ஒண்ணும் மட்டமான தண்ணி எல்லாம்குடிக்கிறதில்ல. நானும் எங்கப்பா மாதிரி சின்ன வயசிலேயே செத்துடுவேன். நீயும் எங்கம்மா மாதிரி இன்னொரு கல்யாணம் செய்துக்கிட்டு மினுக்கலாம்னு கனா காணாதே. அப்படின்னு கன்னா பின்னான்னு பேசறாரு" என்றவுடன் அவனது தாய்க்கு மனமானதுபடும் துன்பம் "பூபதி அவங்கப்பா மாதிரி ஆயிட்டான். நான் அவருக்காக காலமெல்லாம் அழலியேங்கிற ஆத்திரம். எதுக்காக போலியா அழறது? அவரு போனது எனக்கு நிம்மதியாகத்தான் இருந்திச்சு!. மனம்விட்டுப் பேசினாள். நான் அவர்கிட்ட தினம்தினம் அடிப்பட்டுச் சாகறதை அவன் எவ்வளவோ பாத்திருக்கான். கத்தியால முகத்தில் கீறியிருக்கார். ஒரு தடவை, என் முன்பல்லு ரெண்டையும் பேத்து அப்புறம், பொய்ப்பல் வெச்சுக்கிட்டேன். நினைத்துப் பார்க்கவும் பிடிக்காத்தை வாய்விட்டுச் சொல்ல வேண்டி வந்துவிட்ட்டே எனறிருந்தது. சற்று யோசித்துவிட்டு சொன்னாள் அப்பொ எல்லாம் பூபதி பயந்து அழுவான்".

அன்று தன் தந்தை செய்ததைக் கண்டு பயந்து அழுதவன் இன்று அதையே தன் மனைவியிடம் செய்து காட்டுகிறான். அவனுக்கு தன் தாய் தந்தைக்காக அழாதது கோபமாக இருந்தாலும், அவள் அழும்படி அவன் நடந்துகொள்ளவில்லை என்பதும், அதுவே அவளது மனதில் மறுமணத்திற்கு வித்திடும்படி செய்ததையும் அவன் உணரவில்லை. இன்று தன் தாய் அனுபவித்த அதே வலிகளை தன் மனைவிக்குத் தருகிறோமே என்பதை அவன் உணரவில்லை. அவனது தாய் அவள் மருமகள் தன் நிலையிலிருப்பதை உணர்ந்து, அவள் தாய்வீட செல்லும்படி கூறிவிட்டாள். இக்கதை குடித்து தன்னையும் வருத்தி, பிறரையும் வருத்திய தந்தைக்குப் பிறந்தவன், பிற்காலத்தில் அன்பினால் கணவனை இழந்து நிற்கும் பெண்ணை திருமணம் செய்துக்கொண்டு குடும்பத்தை அழகாக நடத்துபவனால் வளர்க்கப்பட்டவன் என்ற இரு தந்தையர் வாழ்வைக் கண்டும், சரியான வழியை தேடாத மகனையும், அவனைச் சார்ந்தவர்கள் மனநிலைகளையும், உணர்வையும் வெளிப்படுத்துகின்றன. மறுமணம் செய்ததால் பெற்ற பிள்ளையால் வெறுக்கப்படும் தாயின் மன வேதனையை வெளிப்படுத்துகிறது. கணவனானவன் மனைவியை போற்றுபவனாய், அரவணைப்பவனாய் இருத்தலே சிறந்ததாக அமையும் என்ற மறைமுக கருத்தும் வெளிப்படுத்தப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் மனைவியை சித்திரவதை செய்தால் அவளால் வெறுக்கப்படும் அவலநிலையே கணவன்களுக்கு ஏற்படும் என்பதும் வெளிப்படுகிறது.

## கடற்கரை கோயிலில் ஒரு கொலை

கடற்கரை கோயில் எனும் சிறுகதை பணத்தைவிட அன்பு பெரியது எனும் நிலையை எடுத்துக்கூறுகிறது. விதவைப் பெண்ணை மணந்து ஒரு வாரம் அவளுடன் வாழ்ந்து, பின் பிரிந்து

சென்றவன், அவள் குழந்தையை பெற்று, கடலில் மாண்டபின், புது மனைவியுடன் வந்தான். அவன் தன் குழந்தையை வளர்ப்பதற்கான பணத்தை மாதமாதம் கடற்கரைக் கோயிலின் பூசாரியிடம் கொடுத்து வந்தான். அக்குழந்தையும் கோயில் பூசாரியின் மகளாகவே வளர்ந்தாள். அக்குழந்தையின் தந்தையும், அவரது இரண்டாம் மனைவியும் இறந்துவிட, பணம் வருதல் தடைபட்டது. ஆனால் தன் மகளுக்கே அனைத்து சொத்தையும் எழுதி வைத்திருந்தார் அவர். எனவே அவளை கொலை செய்ய அவரது சகோதரன் மகன் சதி செய்ய, அவனை பூசாரி கொன்றார். தற்காப்பிற்காக கொன்றதால் அவர் கைது செய்யப்படவில்லை. அவரால் வளர்க்கப்பட்ட அப்பெண் பூசாரியே தன் தந்தை என, தன்னை வளர்த்த பாச மிகுதியில் பணத்தை துச்சமாக மதித்து, அவ்வூரிலேயே வாழ்ந்தாள் அப்பெண்.

“என்னோட வீடு இதுதான். அப்பா இவர்தான்னு. அழுத்தமா சொல்றா! அப்போ பண்டாரத்தோட முகத்தைப் பார்த்திருக்கணுமே!”

“அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்பர். இக்கதையில் பண்டாரம் வளர்த்த பெண் கூறியதைக் கேட்டு அவரது, மனநிலை முகத்தின் வழியே வெளிப்பட்டது எனலாம். அப்பெண்ணை வளர்த்ததற்கான அத்தனை மனநிறைவும் அவர் பெற்றிருக்கிறார் என்ற உணர்வும் உணர்த்தப்படுகிறது.

## வாக்குமூலம்

வாக்குமூலம் எனும் சிறுகதை தன் குடும்பத்தில் பதினான்கு பேரை தீயிட்டு எரித்தவனுக்கு தண்டனை வாங்கிக்கொடுக்க போராடும் இளம்பெண், பணத்திற்காக விலைபோன நீதிக்கிடையேயும், துன்பத்தில் உறுதுணையாய் இல்லாமல் ஒதுங்கி, வெறும் அறிவுரை வழங்கிய சமுதாயத்திற்கிடையேயும், மிஞ்சிய தாய், தம்பியென அனைவரும் மனதில் நிழலாட, வாக்குமூலம் அளிக்க நீதிமன்றத்தில் நின்றபோது அவளது மனநிலையும், உணர்வுகளையும் காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர்.

“இப்ப மிஞ்சி இருக்கிறது அம்மாவும், தம்பியும் மட்டுந்தானா? அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். சரியாக பதில்சொல்ல வேண்டுமே என்று கவலை ஏற்பட்டது. ஆமாங்கய்யா, வன்முறை சம்பவம் நடந்தபோது நீ எங்கேயிருந்தே? மொட்டை மாடியிலே. அங்கேயிருந்து கீழே நடந்த்தைப் பார்த்தியா? நீதிமன்றத்தில் அசையாத நிசப்தத்தில் அடிவயிறு துவண்டது. பகபகவென்று ஏதோ ஒன்று எழுந்து அவளுடைய குரல் வளையை அமுக்கிற்று. ஆத்திரமும், துயரமும் இயலாமையுமாக சூறாவளியாய் மூர்க்கத்தனத்துடன் எழும்பி அவளது நாடி நரம்பையெல்லாம் அமுக்கிற்று. வாயைத் திறக்க முயன்றபோது காற்றுதான் வந்தது. சொல்லு கீழே நடந்ததைப் பார்த்தியா? அவள் தலையைக் குனிந்துக்கொண்டாள் வாயைத் திறந்தாள். அது தன்னிச்சையாகப் பேசிற்று பார்க்கல்லே”

நீதியானது பாமர மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளதையும், சமூகமானது நீதிக்கு உறுதுணையாக இல்லாமல் அறிவுரையை மட்டும் கூறுவதாக அமைகிறது என்பதையும் பணம் இருந்தால் கொலைசெய்தவனும் நீதியிலிருந்து தப்பிக்கும் நிலை இன்று உள்ளதையும் யதார்த்தமாக அமைத்துள்ளார். நீதிக்காக போராடிய பெண்ணின் மன உணர்வு இக்கதையின் முக்கிய அங்கமாகும்.

## திண்ணை

வயது முதிர்ந்த மூதாட்டி தன் வீட்டிலிருந்த திண்ணையை மகன் வீட்டை விரிவாக்க முயற்சியில் இடித்துவிட்ட நிலையில், அவளது நினைவுகளின் இருப்பிடமான அந்த திண்ணையை இடித்ததால் அவளுக்கு ஏற்பட்ட உணர்வினை, “படுத்துக்கொள்ளத்தான் திண்ணை சவரணையாக வைத்திருக்கிறீர்களே! இடித்துக் கொட்டி விட்டானே உன் அகமுடையான், என் தலையிலே கொட்டுகிறாப்போலே! கட்டையைப் போடச் சாண் இடமில்லை” என்றும், “அப்பா படுத்துக்கொள்கிற இடம், அநியாயமா இடித்து விட்டானே! உட்கார இடமில்லாமல் நில்லுடி நடுத் தெருவிலே என்று கறுவிவிட்டான்” என திண்ணையைப் பற்றிய நினைவில் பலவாறு தன் மகனையும், மருமகளையும் பழித்துரைக்க, கண் பார்வை குறைவான அவளுக்கு சிமண்டினால் திண்ணையைக் கட்டித் தந்தனர் (Vennila, 2014). பிறகுதான் அவள் மனநிறைவடைடந்தாள் என கதை செல்கிறயது. அவள் திண்ணையை

ஏன் இவ்வளவு நேசித்தாள் என்பதற்கு "அநுபவம் என்ற கல்லை வைத்து, ஆசை என்கிற சாந்தைப் பூசிக் கட்டிய அந்தத் திண்ணையைத் தேடினாள் அவள். வயசு முதிர்ந்த பிறகு ஒரு தனிமை யாருக்கும் வரத்தான் வரும். உடன் இருந்து பழகிய கணவர் போய்விட்டார். பெற்ற குழந்தைகள் பெரியவர்களாகிப் பராமரிப்பின் பிடிக்கு எட்டாமல் போய்விட்டனர். பழகிய ஆசைகள், பாசங்கள் யாவுந்தாம் கட்டின புருஷனின் நினைவு, அந்தத் தோழமை, பெற்ற குழந்தைகளின் பாசம் யாவற்றுக்கும் இருப்பிடமாக இருந்தது அந்தத் திண்ணை." என்ற வரிகள் அம்முதியவளின் மனநிலையையும், உணர்வையும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது (Vennila, 2014).

## பூஞ்சோலை

வாடகை வீட்டில் பல குடியிருப்புகளுக்கு மத்தியில் குழந்தையின்றி, கணவனும் அவளை வேலை முடித்து, தன் நண்பனை சந்திக்க சென்றுவிட்டால், அவளது மனமானது தனிமையில் எவ்வகையில் பாதித்தது என்பதை "எத்தனை நேரம் தான் அசல் வீட்டுக் குழந்தைகள் நம் வீட்டிலேயே இருக்கும்? மேலும் அவரவர்கள் வீட்டில் அவரவர்கள் கணவன் மனைவிமார்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என மறுபடியும் அவள் குரல் கம்மிற்று" என்ற வரிகளில் அவளது மனநிலையும், உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர் (Vennila, 2014). இதே நிலையில் அவள் மற்றொரு வீட்டிற்கு குடியேறி குழந்தையையும் ஈன்ற பிறகு, அவள் கணவன் தோழனது வீட்டருகிலிருந்தும் செல்லவில்லை என்பதையும், அவன் குழந்தையுடன் அமர்ந்து விளையாடியதையும் கண்டு மகிழ்ந்த மனநிலையையும் உணர்வையும் "கீழே பாயை விரித்துக் குழந்தையைக் கிடத்தி இருந்தனர். சுந்தரராமன் அதன் அருகில் படுத்துக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்தான். கோமதி தன் கணவனையே கண் கொட்டாமல் பார்த்தாள்" என வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர் (Vennila, 2014). இதன்மூலம் மனநிலைகளும் உணர்வுகளும் சூழலுக்கு ஏற்ப மாற்றங்களுடையது என்பதையும் அறியலாம்.

## முடிவுரை

இவ்வாய்வின் மூலம் பெண் எழுத்தாளர்கள் சிறுகதை இலக்கியங்களில் மனித உணர்வுகள் சமுதாயம், குடும்பம் என்ற இரண்டினாலும் தாக்கங்களுக்கு உள்ளாகும் விதங்களையும், சூழலுக்கேற்ப மனிதர்களின் மனநிலைகள் மாற்றங்கள் தோன்றுவதையும், குடும்பம், சமுதாயம் போன்றவற்றின் நிறை, குறைகளை எடுத்துக்காட்டுவதையும் நெறிகளாகக் கொண்டுள்ளனர் என்பதை அறியலாம். இவ்வுணர்வுகளை வெளிப்படுத்தி அவ்வுணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் கதைகளினால் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர் பெண் படைப்பாளர்கள்.

## References


Ambai, (2017) Kattil Oru Maan, Kalachuvadu Padippagam, Nagarkoil, India

Tiruvalluvar, (2016) Thirukkural, Thendral Nilayam, Chidambaram, India

Vennila, A. (2014) Meedhamirukkum sorkkal, Akani Veliyedu, Vandavi, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License